சார்பு நீதிமன்றம், பல்லடம்.

MCOP.NO. 285/2024

மனுதாரர் தரப்பு சாட்சி : PW1

பெயர் மற்றும் வயது : ராஜ்

தந்தை பெயர் : கருப்புசாமி

தொழில் :

கிராமம் :

தாலுகா : பல்லடம்

மாவட்டம் : திருப்பூர் மாவட்டம்

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 09 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு.க.யுவராஜ்,பி.ஏ.,பி.எல்., சார்பு மற்றும் உதவி அமர்வு நீதிபதி, பல்லடம் அவர்களின் முன்னிலையில் சாட்சிக்கு இந்நீதிமன்ற இரண்டாம் நிலை பெஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டது

**மனுதாரர் தரப்பில் சாட்சி வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை**

எனது தரப்பு முதல் விசாரணையை எழுத்து மூல நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ளது எனது கையெழுத்து தான். நான் சொன்ன விவரங்களை கணினியில் பதிவு செய்து அதனை நான் சரிபார்த்து கையெழுத்து செய்து தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு ஆவணங்களாக

1. முதல் அறிக்கை நகல் ம.சா.ஆ 1 ஆகவும்
2. ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ 2 ஆகவும்
3. வாகன பதிவு சான்று நகல் ம.சா.ஆ 3 ஆகவும்
4. வாகன காப்பீடு நகல் ம.சா.ஆ 4 ஆகவும்
5. 1 வது எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் நகல் ம.சா.ஆ 5 ஆகவும்
6. இறுதிஅறிக்கை நகல் ம.சா.ஆ 6 ஆகவும்
7. மாதிரி வரைபடம் நகல்ம.சா.ஆ 7 ஆகவும்
8. பார்வை மகஜர் நகல் ம.சா.ஆ 8 ஆகவும்
9. TN 39 U 5878 ஆய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ 9 ஆகவும்
10. TN 37 DA 7248 ஆய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ 10 ஆகவும்
11. TN 42 R 5707 ஆய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ 11 ஆகவும்
12. TN 39 W 6561 ஆய்வு அறிக்கை நகல் ம.சா.ஆ 12 ஆகவும்
13. மருத்துவ விடுப்பு வா.சா.ஆ. 13 ஆகவும்

**2 வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது மாத வருமானத்தை காட்ட நான் எந்தவிதமான ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் எனவே நான் எனது வழக்கில் சொல்லி உள்ளது போல் மாதம் ரூபாய் 18000 சம்பாதிப்பதாக சொல்லி உள்ளது தவறு என்றால் சரியல்ல. நான் கூலி வேலை செய்து வருகிறேன்எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு நான் அரசு மருத்துவமனையில்

தான் சிகிச்சை எடுத்துக் கொண்டேன் என்றால் சரிதான். எனக்கு எந்த விதமான எலும்பு முறிவு அல்லது கொடுங்காயமும் ஏற்படவில்லை சாதாரண சிராய்ப்பு காயம் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். ஒன்றாவது எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து நடைபெறவில்லை நான் வாகனத்த பழுது பார்க்க சென்றபோது ஒர்க் ஷாப்பின் உரிமையாளர் நிறைய வாகனங்களை விதிமுறைக்கு மாறாக சாலையில் நிறுத்தி இருந்ததால் தான் விபத்து நடந்துள்ளது. எனவே நான் கோரியுள்ள இழப்பீடு எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் அதிக தொகை இழப்பீடு கோரியுள்ளேன் எனவே எனது மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றார் சரியல்ல.

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/–)K.Yuvaraj,B.A.,B.L.,

சார்பு நீதிபதி, பல்லடம்.